## அதுரலிய பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 09 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஜூன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அதுரலிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பல்வேறு சீராக்கல் மேற்கொள்ளும் போது திரண்ட நிதியத்திற்கு ரூபா 4,267,729 இற்கான தொகை குறைவாக செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வருமானம் மற்றும் செலவுக் கணக்கு பற்றாக்குறை ரூபா 2,099,448 தொகை எனினும், மிகைகள் மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கு அவை ரூபா 2,168,998 தொகை என சீராக்கல் செய்யப்பட்டிருந்தமையால், ரூபா 69,550 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | 2020 ஆண்டின் போது ஆயுள்வேத நிலையத்தின் அறைகள் வேறாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 350,000 இற்கான செலவு மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவு என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | சபைக்குச் சொந்தமான மீன் சந்தையை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்திருந்த ரூபா 88,850 தொகைக்கான உபகரணங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்க வில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மூலதனப்படுத்தி சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டிற்கான ரூபா 187,348 தொகைக்கான அனுமதிப்பத்திரக் கட்டண சிட்டை இடப்பட்ட வருமானம், வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 118,998 தொகை என காட்டப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 68,350 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் முத்திரை பட்டோலைகள் தயாரிக்கும் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சபைக்குக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,949,120 எனினும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 7,446,880 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 4,497,760 தொகை மிகையாகக் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 7,210,616 தொகைக்கான 04 கணக்கு விடயங்களில் உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 133,947 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதி களில் வித்தி யாசங்களை இணக்கஞ் செய்து கணக் குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமப்படாத மீதிகள் தொடர்பாக இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 148,365,922 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சான்றுகள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 146 | 2012 ஆண்டின் போது வீதவரி விடயங்களுக்காக ஆதனங்களை மதிப்பீடு செய்த பின்னர் மீண்டும் மதிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்தத் தவறும் நபர்கள் தொடர்பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை தயாரித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதவரி செலுத்தத் தவறும் நபர்கள் தொடர்பான அட்டவணை ஒன்று தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகள், மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்குகளுடன் சமர்ப்பிக்கின்றேன். |
| (இ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி. 571 | காலங் கடந்த ரூபா 1,592,920 தொகை பெறுமதியான வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | காலங் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) நி.பி. 1646 | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பாக ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் முறைப் பிரகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 172,717 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,058,865 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,717,000 | 1,308,494 | 1,056,993 | 1,418,991 | 1,798,500 | 1,267,457 | 1,206,899 | 1,167,490 |
| வாடகை | 2,185,000 | 3,116,696 | 3,049,972 | 70,410 | 3,985,000 | 1,363,365 | 1,377,217 | 3,686 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 223,500 | 159,684 | 128,214 | 33,470 | 243,100 | 255,146 | 254,231 | 2,000 |
| ஏனைய வருமானங்கள் | 9,057,000 | 8,830,389 | 3,493,129 | 21,291,332 | 5,950,000 | 9,522,903 | 581,413 | 15,954,072 |
| மொத்தம் | 13,182,500 | 13,415,263 | 7,728,308 | 22,814,203 | 11,976,600 | 12,408,871 | 3,419,760 | 17,127,248 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை வீதவரி மீதி ரூபா 1,118,930 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 662,135 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 1,781,035 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 412,185 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,138,880 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | குறிப்பிட்ட இடங்களுக்கு சென்று அறிவுறுத்தல் மற்றும் நாட்டின் சீரற்ற தன்மை காரணமாக நடமாடும் சேவை நடாத்த முடியாமல் போனது. |
| (ஆ) | ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 44,960 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 12,395 தொகை ஆகும். மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 7,244 தொகை ஆகக் காணப்பட்ட மையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 50,111 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கமநல சேவை ஆணையாளர் திணைக்களத்திற்கு ஏக்கர் வரி செலுத்துதல் மற்றும் ஆதனங்களின் உரிமையாளர்களை சரியாக இனங்காண முடியாமை |

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 526,700 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 20,732,306 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவைத் தொகை விரைகாக அறவிடப்பட வேண்டும். | மாகாண வருமானத் திணைக்களத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் நீதிமன்றத் தண்டப்பணம் இடையறாது கிடைக்கப்படுகின்றது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **செயல் நடவடிக்கைத் திட்டம்** | | |
| | மீளாய்வாண்டில் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகள் அனைத்தும் அடங்கக் கூடிய விதமான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஜனவரி மாதம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | **திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்** | | |
| | மீளாய்வாண்டு இறுதி அளவில் குப்பை குவிப்பதற்காக முறையான வேலைத் திட்டம் ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்காததுடன், ஒரு நாளைக்கு சேகரமாகும் சுமார் 2 தொன் குப்பைகள் முறைசாரா விதமான கொடபிடிய தனியார் காணி ஒன்றில் குவிக்கப்படுகின்றது. | முறைப் பிரகாரம் குப்பைகள் குவிக்கப்பட வேண்டும். | காணி ஒன்று காணப்படாமையினால் தனியார் காணி ஒன்றில் குப்பைகள் குவிக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு ஒரு முறை மண் போட்டு மூடப்படுகின்றது. |
| (இ) | **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு** | | |
| | நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்த வேண்டும். | 2020 பாதீட்டின் மூலம் விரிவாக காட்டக் கூடிய விதமான திட்டம் தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை கண்டறியப்பட்டிருந்த 27 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளில் 20 தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்க வில்லை. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை பரிசோதனை செய்து முறைப்படுத்தலுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 02 மிகை பதவியணியினை முறைப்படுத்து வதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடப் பதவிகளை அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | சேர்க்கப்பட்டிருந் சுகாதார மற்றும் பாதைத் தொழிலாளர்களுக்கு குறிப்பிட்ட கடமை சாட்டப்பட்டிருக் காமையால் பிரதியீட்டு அடிப்படை மீண்டும் ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தமையால் சபைக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,919,921 மேலதிகச் செலவு ஒன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | சேர்க்கப்பட்டிருந்த பதவிகள் தொடர்பாக கடமை சாட்டுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | கடமை அலுவல்கள் சாட்டுதல்கள் அரசியல்வாதி களினால் மேற்கொள்ளப் படுகின்றது. |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான பெக்கோ இயந்திரம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தியமையால், மீளாய்வாண்டின் போது ரூபா 580,188 இற்கான எரிபொருள் செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு 941.4 மீற்றர் மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தியிருந்த போதிலும் நிறைவேற்றப்பட்டிருந்த வேலைப் பகுதிகள் தொடர்பாக மதிப்பீடு மற்றும் முடிவுற்ற வேலை அறிக்கை தயாரித்திருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைப் பகுதிகள் தொடர்பாக மதிப்பீடு மற்றும் முடிவுற்ற வேலை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | தலைவரின் அறிவுரையின் படி சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டு வந்த சபைக்குச் சொந்தமான 02 ஏக்கர் 02 ரூட் 39 பர்சஸ் தொகைக்கான 03 காணிகள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 13 காணிகள் தொடர்பாக காணி உறுதிகள் மற்றும் வரைவுகள் காணப்படவில்லை. | காணிகளுக்காக காணி உறுதிகள் மற்றும் வரைவுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 05 ஏக்கர் 02 ரூட் 06 பர்சஸ் கொண்ட 05 காணிகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பயன்படுத்தப்பட்டு வரும் அனைத்து காணிகளையும் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரித்தாக்க நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 அகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட வேண்டும். | போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று எதிர்காலத்தில் மேற்கொள்வேன். |